*TNVR060088032023*
*J.M. II court, Sattur* *CC.No. 282 of 2023* *Dated: 24.07.2026*

FORM NO. 124
JUDICIAL MAGISTRATE NO:II COURT– SATTUR
JUDGEMENT IN CALENDER CASE NO **282/2023**
ON THE FILE OF JUDICIAL MAGISTRATE NO:II, COURT – SATTUR

| | |
|---|---|
| Complaint | அரசுக்காக:– காவல் உதவி ஆய்வாளர், இருக்கன்குடி காவல் நிலையம், குற்ற எண்.82/2023. |
| Accused | 1.திரு.சின்னவாழவந்தான், த/பெ.மாடசாமி.<br>2.திரு.பெரியவாழவந்தான், த/பெ.மாடசாமி.<br>3.திருமதி.வளர்மதி, க/பெ.வாழவந்தான். |
| Offence | குற்றம்சாட்டப்பட்டது :– 1 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323 ன் படியும், 2 வது மற்றும் 3 வது எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 506(2) ன் கீழும்,<br>குற்றச்சாட்டு வனையப்பட்டது:– 1 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323 ன் படியும், 2 வது மற்றும் 3 வது எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 506(2) ன் கீழும், |
| Finding | 1 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323 ன் படியும், 2 வது மற்றும் 3 வது எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 506(2) ன் கீழும் வனைந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, அவர்கள் கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்கள். |
| Sentence | எதிரிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள். |

| Description of the Accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Sl. No. (1) | Name (2) | Father's Name/ Husband's Name (3) | Caste or race | Occupation (4) | Residence (5) | age (6) |
| 1. | சின்னவாழவந்தான் | மாடசாமி | இந்து | கூலி | நத்தத்துப்பட்டி, சாத்தூர். | 43 |
| 2. | பெரியவாழவந்தான் | மாடசாமி | இந்து | கூலி | நத்தத்துப்பட்டி, சாத்தூர். | 48 |
| 3. | வளர்மதி | வாழவந்தான் | இந்து | கூலி | நத்தத்துப்பட்டி, சாத்தூர். | 46 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Occurrence (7) | Complaint (8) | Apprehension of appearance (9) | Release on Bail (10) | Commencement of trail (12) | Close of Trial (13) | Sentence or Order (14) | Explanation of delay (16) |
| 06.08.2023 | 07.08.2023 | A1, A2, A3 - 14.08.2023 | A1, A2, A3 - 22.08.2023 | 05.12.2023 | 17.07.2026 | 24.07.2026 | |

குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் :– 01.11.2023

குற்ற இறுதி அறிக்கை கோப்புக்கு எடுத்த நாள்:–01.11.2023

இதன் நகல் :– மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.07.24 18:40:19 +0530

Judicial Magistrate, No.II Sattur

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
முன்னிலை : திரு. சா. வரதராஜன், B.A.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்
2026 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 24 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண்.282/2023
*****

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime number of the Offence) | அரசுக்காக:– காவல் உதவி ஆய்வாளர், இருக்கன்குடி காவல் நிலையம், குற்ற எண்.82/2023. |
| 2. | எதிரிகளின் பெயர் (Name) | 1.திரு.சின்னவாழவந்தான் (வயது 43/2026), த/பெ.மாடசாமி, 2/222, தெற்குத் தெரு, நத்தத்துப்பட்டி, சாத்தூர்.<br><br>2.திரு.பெரியவாழவந்தான் (வயது 48/2026), த/பெ.மாடசாமி, 2/221, தெற்குத் தெரு, நத்தத்துப்பட்டி, சாத்தூர்.<br><br>3.திருமதி.வளர்மதி (வயது 46/2026), த/பெ.வாழவந்தான், 2/221, தெற்குத் தெரு, நத்தத்துப்பட்டி, சாத்தூர். |
| 3. | எதிரிகளின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரிகளின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரிகளின் முகவரி (Residence) | |
| 6. | எதிரிகளின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 06.08.2023 |
| 8. | புகார் தேதி (Complaint) | 07.08.2023 |
| 9. | எதிரிகள் கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | A1, A2, A3 – 14.08.2023 |
| 10. | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | A1, A2, A3 – 22.08.2023 |
| 11. | Commitment | – |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 05.12.2023 |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 17.07.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | எதிரிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள். |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of Copy of Judgment or finding on Accused) | 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323 ன் படியும், 2வது மற்றும் 3வது எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 506(2) ன் கீழும் வனைந்துள்ள |



S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.07.24 18:40:28 +0530

| | | |
|---|---|---|
| | | குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, அவர்கள் கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்கள். |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | சாட்சிகளை முன்னிலைப்படுத்தியதில் கால தாமதம் |

இவ்வழக்கானது என் முன்பு 17.07.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.மோகன், M.A., B.L.,அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

## <u>தீர்ப்புரை</u>

1. <u>குற்றச்சாட்டு</u> :–

06.08.2023 ம் தேதி புகார்தாரர் அவரது பெட்டிக்கடையில் இருந்தபோது 1 வது எதிரி "செலவுக்கு பணம் கொடு" என்று கேட்டதாகவும், அதற்கு புகார்தாரர் கடையை விட்டு வெளியே வந்து புகார்தாரர் "தன்னிடம் பணம் இல்லை" என்று 1 வது எதிரியிடம் சொன்னதால் அதற்கு 1 வது எதிரி "தாடி தேவிடியா" என்று அசிங்கமாக திட்டி கையால் புகார்தாரரின் கன்னத்தில் அடித்து பொது இடத்தில் வைத்து அவமானபடுத்தியதாகவும், அருகில் இருந்த 2 வது மற்றும் 3 வது எதிரிகள் "ஏண்டி எங்க இடத்துல கடையை வச்சுக்கிட்டு எங்க பிள்ளைக்கே செலவுக்கு பணம் கொடுக்கமாட்டியா தேவிடியா கடையை காலி பன்னுடி" என்று சொல்லிக்கொண்டே புகார்தாரரின் தலைமுடியைப் பிடித்து கீழே தள்ளிவிட்டு 2 வது எதிரி கம்பாலும், அவரது மனைவி கையால் முதுகிலும் அடித்து இடது பின்னந்தலையில் இரத்தகாயம் மற்றும் வலது காது நுனியில் சிதைந்த காயம் ஆகிய சிறுதன்மை காயத்தை ஏற்படுத்தியதாகவும், பின்னர் அங்கிருந்து செல்லும்போது கையில் இருந்த கட்டையை காண்பித்து "கடையை காலி செய்யலனா உன்னை கொல்லாமல் விடமாட்டோம்" என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323 ன் படியும், 2 வது மற்றும் 3 வது எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 506(2) ன் கீழான குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல்</u> :–

இவ்வழக்கில், எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பில்



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.07.24 18:40:31 +0530

சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207– இன் கீழ் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. **<u>கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 ன் கீழ் விசாரணை</u> :–**

எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கை பற்றி கேட்ட போது, அவர்கள் பொய் வழக்கு என்றும், குற்றவாளிகள் இல்லை என்றும் கூறினார்கள். இருதரப்பிலும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புகளை ஆய்வு செய்த போது, 1 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323 ன் படியும், 2 வது மற்றும் 3 வது எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 506(2) ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைய போதுமான முகத்தோற்ற சான்றுகள் இருந்ததால், எதிரிகள் மீது அதே பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்ற சாராம்ச சங்கதிகள் குறித்து அவர்களிடம் விளக்கி கூறிய போது, எதிரிகள் பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார்கள். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :–**

பட்டியல் சாட்சிகளில் இருந்து 2 நபர்கள், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. **<u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு</u> :–**

5.1. இவ்வழக்கின் முதல் எதிரி சின்ன வாழவந்தான், புகார்தாரரான அ.சா.1 – மாரியம்மாளின் கணவர் ஆவார். முதல் எதிரி சின்ன வாழவந்தான் வீட்டில் இருக்கும் பணத்தை எடுத்துக்கொண்டு போய் மது அருந்துவார். 06.08.2023–ஆம் தேதி இரவு சுமார் 7.00 மணி அளவில், அ.சா.1 – மாரியம்மாள் அவருடைய கடையில் இருந்தபோது, முதல் எதிரி சின்ன வாழவந்தான் பணம் கேட்டுப் பிரச்சனை செய்தார். அப்பொழுது, தேவிடியா என்று அசிங்கமாகத் திட்டி, கையால் கன்னத்தில் அறைந்தார்.

5.2. அருகில் இருந்த முதல் எதிரியின் அண்ணன் பெரிய வாழவந்தான் (இரண்டாவது எதிரி) மற்றும் அவருடைய மனைவி வளர்மதி (மூன்றாவது எதிரி) ஆகிய இருவரும் அ.சா.1 – மாரியம்மாளைப் பார்த்து, "தேவிடியா, கடையைக் காலி பண்ணுடி!" என்று சொல்லி, தலைமுடியைப் பிடித்து இழுத்துக் கீழே தள்ளிவிட்டனர். அப்போது, இரண்டாவது எதிரி பெரிய வாழவந்தான் கம்பாலும், மூன்றாவது எதிரி வளர்மதி கையாலும் அடித்தார்கள். இதில் அ.சா.1 – மாரியம்மாளின் பின் தலையில் காயம் ஏற்பட்டது.



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.07.24 18:40:35 +0530

5.3. இதனைப் பார்த்த அங்கிருந்த நபர்கள் சத்தம் போட்டுச் சண்டையை விலக்கிவிட்டார்கள். இரண்டாவது எதிரியும் மூன்றாவது எதிரியும் அங்கிருந்து செல்லும்போது, கையில் இருந்த கட்டையைக் காண்பித்து, "கொல்லாமல் விடமாட்டோம்" என்று மிரட்டினார்கள். தனக்கு ஏற்பட்ட காயத்திற்குச் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு அ.சா.1 – மாரியம்மாள் சிகிச்சைக்காகச் சென்றார். அங்கு அவர் உள்நோயாளியாகச் சிகிச்சை பெற்றுவந்தபோது, வழக்கு தொடர்பாக விசாரிக்க வந்த உதவி ஆய்வாளர் அ.சா.2 – ராஜ்குமாரிடம் புகார் (அ.சா.ஆ.3) கொடுத்தார். அதன் அடிப்படையில், காவல் நிலையக் குற்ற எண் 82/2023–இல், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323, 506(ii) ஆகிய குற்றங்களுக்காக வழக்கு பதிவு செய்யப்பட்டது.

5.4. வழக்கைப் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் அ.சா.2 – ராஜ்குமார், சம்பவ இடத்திற்குச் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் (அ.சா.ஆ.5) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.6) தயார் செய்தார். அவர் சாட்சிகளை விசாரித்து, அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார். அ.சா.1 – மாரியம்மாளுக்குச் சிகிச்சை அளித்த மருத்துவர் சிவகுமார் என்பவரை விசாரித்து, அவர் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழைப் (அ.சா.ஆ.7 மற்றும் 8) பெற்று, மருத்துவாரின் வாக்குமூலத்தையும் பதிவு செய்தார். அவருடைய விசாரணையிலிருந்து வழக்குச் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால், எதிரிகள் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323, 506(ii) ஆகிய குற்றங்களுக்காக இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

6. **<u>கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) கீழ் விசாரணை</u> :–**

மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவகளிடம் விளக்கி கேட்ட போது, அவர்கள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்கள். மேலும், எதிரிகள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள்.

7. **<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>:–**

1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323 ன் படியும், 2வது மற்றும் 3வது எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 506(2) ன் கீழும் வனைந்துள்ள குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.07.24 18:40:38 +0530

8. **சாட்சியங்கள் மதிப்பீடு** :–

8.1. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபராகக் குறிப்பிடப்பட்டுள்ள புகார்தாரர் மாரியம்மாள், அரசு தரப்பு முதலாவது சாட்சியாக (அ.சா.1) விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர், அவருக்கும் எதிரிகளுக்கும் இடையே உள்ள உறவுமுறையைப் பற்றிக் கூறியுள்ளார். மேலும், அவருடைய கணவரான முதல் எதிரி சின்ன வாழவந்தான் குடித்துவிட்டு வந்து பிரச்சனை செய்துவந்தார் என்றும், அதனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு காவல் நிலையத்திற்குச் சென்று புகார் (அ.சா.ஆ.3) கொடுத்ததாகவும் கூறினார். தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால், அவர்களுக்கு எதிராகச் சாட்சியம் அளிக்க விருப்பம் இல்லை என்றும், இவ்வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள புகார் மனுவில் உள்ளது தன்னுடைய கையெழுத்துதான் (அ.சா.ஆ.1) என்றும், ஆனால் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது தனக்குத் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

8.2. அ.சா.1 – மாரியம்மாள் அவருடைய முந்தைய கூற்றுகளுக்கு முரணாகவும், அரசு தரப்பு வழக்கிற்கு எதிராகவும் சாட்சியம் அளித்ததால், அவரை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக்கி குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. ஆனாலும், அவரிடமிருந்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாகச் சாட்சியம் எதுவும் பெறப்படவில்லை.

8.3. அ.சா.1 – மாரியம்மாள் அவருடைய முதல் விசாரணையில், அவர் தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதாகவும், சமாதானமாகச் செல்ல எதிரிகள் அவரைக் கட்டாயப்படுத்தவோ, மிரட்டவோ இல்லை என்றும், எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் (அ.சா.ஆ.2) கையொப்பம் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அதனால், அரசு தரப்பில் இதர சாட்சிகள் விடுவித்துக்கொள்ளப்பட்டு, புலன் விசாரணை அதிகாரி அ.சா.2 – ராஜ்குமார் அரசு தரப்பு இரண்டாவது சாட்சியாக (அ.சா.2) விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் இவ்வழக்கில் செய்த புலன் விசாரணை தொடர்பான விபரங்களைக் குறித்துச் சாட்சியம் அளித்துள்ளார்.

8.4. இவ்வழக்கில் காயம்பட்ட நபராகக் குறிப்பிடப்பட்ட அ.சா.1 – மாரியம்மாள், அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாகச் சாட்சியம் அளிக்காத சூழ்நிலையினாலும்; அவரை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக்கிக் குறுக்கு விசாரணை செய்தபோது, அரசு தரப்பு வழக்கின் கருத்துரைக் கேள்விகளாக அவரிடம் கேட்டபோதும் அதை அவர் மறுத்துச் சாட்சியம் அளித்த சூழ்நிலையினாலும்; அவரைத் தவிர வழக்குச் சம்பவம் தொடர்பாக வேறு சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை என்பதினாலும், புலன்



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.07.24 18:40:42 +0530

விசாரணை தொடர்பாகச் சாட்சியம் அளித்துள்ள உதவி ஆய்வாளரின் சாட்சியம் மட்டுமே எதிரிகளை இவ்வழக்கில் குற்றவாளிகள் என்று முடிவுசெய்யப் போதுமானதாக இல்லை.

8.5. மேலும், அ.சா.ஆ.3 புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்று அ.சா.1 ஒப்புக்கொண்டபோதிலும், அதில் எழுதியுள்ள வாசகங்களை உறுதிப்படுத்த சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. ஆகையால், இவ்வழக்கில் கொடுக்கப்பட்டுள்ளதாக உள்ள புகாரை அ.சா.1 தான் கொடுத்தாரா? என்பதும் சந்தேகம் கொள்ளும் வகையில் அமைகிறது. ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை நிரூபிப்பது வேறு, அதன் உள்ளடக்கத்தை நிரூபிப்பது வேறு என்பதால், அ.சா.1–இன் சாட்சியம் மூலம் புகார் அவரால் கொடுக்கப்பட்டது என்று நிரூபிக்கப்படவில்லை.

8.6. இதன்மேல் பரிசீலனை செய்யப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்களின் ஒட்டுமொத்தத் தொகுப்பாக, அரசு தரப்பு வழக்கினை நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கத் தவறியுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதி, இவ்வழக்கில் எதிரிகளுக்குச் சந்தேகத்தின் பலன் கிடைக்கக்கூடியது என்று முடிவு செய்கிறது.

9. **முடிவு :–**

9.1. 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323 ன் படியும், 2வது மற்றும் 3வது எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 506(2) ன் கீழும் ஆன குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்கள்.

9.2. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

9.3. இவ்வழக்கில் எதிரிகள் ஆஜராக எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 24.07.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.07.24 18:40:46 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,

சாத்தூர்.

**பிற்சேர்க்கை**

**1. அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி.மாரியம்மாள் |
| அ.சா.2 | திரு.ராஜ்குமார் ( சார்பு ஆய்வாளர்) |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 07.08.2023 | புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 02.07.2026 | சமாதான மனு |
| அ.சா.ஆ.3 | 07.08.2023 | புகார் மனு |
| அ.சா.ஆ.4 | 07.08.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 07.08.2023 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 07.08.2023 | வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 06.08.2023 | அ.சா.1 க்கு சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.சிவக்குமார் வழங்கிய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.8 | 06.08.2023 | அ.சா.1 க்கு சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.சிவக்குமார் வழங்கிய காயச்சான்று |

**3. அரசு தரப்பு சான்று பொருள்** :–இல்லை.
**4. எதிரிகள் தரப்பு சாட்சிகள்** :– இல்லை
**5. எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்** :– இல்லை
**6. எதிரிகள் தரப்பு சான்று பொருட்கள்** :– இல்லை

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.07.24 18:40:50 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
சாத்தூர்

**குறிப்பு** :–

1. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2. சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.